# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 23.08. 2021 | 1) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தஸ்நேவிஸ் நகர் மற்றும் அய்யர்விளைப் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ, 21,30,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 12.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி உறை 12.08.2021 அன்று 3.30 மணிக்கு திறக்கப்பட்டது.<br>1)திரு. ஜே. சுரேஷ் ஜெயக்குமார்<br>மதிப்பீட்டை விட 0.02 சதவிகிதம் குறைவு (ரூ. 18,79,291.00)<br>2)திரு.டி. முருகன்<br>மதிப்பீட்டை விட 6.16 சதவிகிதம் அதிகம் (ரூ. 19,95,411.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02 சதவிகிதம் குறைவாக தொகை ரூ 18,79,291.00 (ஜிஎஸ்டி இல்லாமல்) கொடுத்துள்ள திரு ஜே. சுரேஷ் ஜெயக்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மதிப்பீட்டை விட 0.02சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு ஜே.சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ2/00243/2021 | 73)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 2)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி திரேஸ்புரம் கடற்கரை முதல் FCI குடோன் வரையுள்ள பக்கிள் ஓடையின் உட்பகுதியில் உள்ள மண், செடி மற்றும் சகதிகளை இயந்திரங்களை பயன்படுத்தி அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ, 28,85,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 12.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி உறை 12.08.2021 அன்று 3.30 மணிக்கு திறக்கப்பட்டது.<br>1)திரு. ஜே. சுரேஷ் ஜெயக்குமார்<br>மதிப்பீட்டை விட 0.08 சதவிகிதம் குறைவு (ரூ. 25,46,143.25)<br>2)திரு.டி. முருகன்<br>மதிப்பீட்டை விட 1.91 சதவிகிதம் அதிகம் (ரூ. 25,96,675.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08 சதவிகிதம் குறைவாக தொகை ரூ 25,46,143.25 (ஜிஎஸ்டி இல்லாமல்) கொடுத்துள்ள திரு ஜே. சுரேஷ் ஜெயக்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 74)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br>மதிப்பீட்டை விட **0.08**சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு ஜே.சுரேஷ் ஜெயக்குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ2/0217/2021 | |
| | **3)** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்– பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் புதிய பேருந்து நிலைய இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் மேற்கூறை அமைக்கும் பணிக்கு ரூ. **36,30,000/–** மதப்பீட்டில் தயாரிக்கப்பட்டு **12.08.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளி உறைகள் அன்றே **3.30** மணிக்கு திறக்கப்பட்டதில் ஒரு நிறுவனம் சமர்ப்பித்த விலைப்புள்ளி உறையில் ஒரு இனத்தை **(**வ.எண்.**8)** தவிர மற்ற இனங்களுக்கு (வ.எண்.1 முதல் 7 வரை மற்றும் **9)** விலை ஏதும் நிரப்பப்படாமல் சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி உறையை எடுத்துக்கொள்ள இயலாது. எனவே மற்ற இரு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி உறையின் ஒப்புநோக்குப் பட்டியலின்படி கீழ்க்கண்டவாறு.<br>**1)** திருமதி. ஜே. பொன்மணி<br>மதிப்பீட்டைவிட **0.50** சதவிகிதம் குறைவு **(**ரூ. **31,87,815.00)**<br>**2)**திரு.பி. ஜோதிமணி,<br>மதிப்பீட்டை விட **0.03** சதவிகிதம் குறைவு **(**ரூ. **32,02,790.00)**<br>வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.50**சதவிகிதம் குறைவான தொகை ரூ. **31,87,815.00** (ஜிஎஸ்டி இல்லாமல்) கொடுத்துள்ள திருமதி. ஜே. பொன்மணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மதிப்பீட்டை விட **0.50** சதவிகிதம் குறைவாக கொடுத்த திருமதி. ஜே. பொன்மணி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/02453/2021 | **75)**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **4)**ஆங்கிலேயருக்கு எதிராக போராடிய கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் **150**வது பிறந்தநாள் **05.09.2021** அன்று வருகிறது. அன்னாரது புகழுக்கு சிறப்பு செய்திடும் வகையில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள மேல பெரிய காட்டன் சாலையின் பெயரினை (மாநகராட்சி கிழக்கு மண்டல் அலுவலகம் முதல் எட்டையாபுரம் சாலை சந்திப்பு நல்ல பெருமாள் பூங்கா வரை) வ.உ.சி. சாலை என பெயர் மாற்றம் செய்திட மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களின் **11.08.2021**ம் தேதிய விண்ணப்பத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மேல பெரிய காட்டன சாலையை வ.உ.சி. சாலை என அறிவிப்பு செய்வதற்கு மாவட்ட ஆட்சி தலைவர் வழியாக அரசிடம் உரிய அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க | **76)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம அனுமதிக்கலாம் ந.க.எண். எப்1 3552/2021 | |
| | 5) இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றின் குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேற்படி பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்வதில் நிர்வாக இடர்பாடுகள் ஏற்பட்டு வருகிறது. ஆகையால் மேற்படி குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தப்படும் பணியாளர்களான Electrician pump operator Lab attender, Technical Helper. Turn cock, Line Man skilled fitter ஆகிய நிலையில் மொத்தம் 57 மனித ஆற்றல்கள் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் மூலம் ஈடுபடுத்தவும் இப்பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட தினக்கூலி (PWD SOR/District Collector Approval Rate) ஊதிய விகிதத்தில் 57 பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.<br>மேலும் இம்மாநகராட்சியில் குடிநீர் விநியோகப் பணிகளில் நிரந்தரப் பணியாளர்களாக பல்வேறு நிலைகளில் பணியாற்றிக்கொண்டிருந்த பணியாளர்கள் பலரும் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றுள்ளதால் அத்தகைய பணியிடங்கள் காலியாக உள்ளது. இதனால் பணிகள் சீராக நடப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. தற்பொழுது மண்டல அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் நகர்புற வாழ்வாதார மையத்தின் மூலம் பணியாளர்கள் வேண்டி ஆணையர் அவர்களின் ஒப்புதல் அறிக்கைகளை அளித்துள்ளனர். ஆகவே இப்பணியின் அவசியம் கருதி இனிவரும் காலங்களுக்கு நகர்புற வாழ்வாதார மையத்தின் மூலம் மேலும் 5 நபர்களுக்கு (தோராயமாக) அனுமதி வேண்டியும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ 8.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். இ2/3874/2018 (CLC) | 77)அலுவலகக் குறிப்ப ஒப்புதல் வழங்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 23.08.2021

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி